# தமிழ்ப் பல்கலைக்கழகம்,

## தஞ்சாவூர்- 613 010

## The Tamil University, Thanjavur – 613 010

# தமிழ்ப் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு மையம்

நடத்தும்

## தமிழ்ச் செம்மொழி இலக்கிய , இலக்கண நூல்களின் மொழிபெயர்ப்புகள்

## (Translation of Classical Tamil Texts and Grammar Books)

(செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நல்கை பெற்றது)

## புத்தொளிப் பயிற்சி (Refresher Course)

19.08.2024 முதல் 04.09.2024 (பதினான்கு நாட்கள்)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு ஆகியவற்றை ஆராய்வதற்காக இருபத்தாறு துறைகள் உள்ளன. அனைத்துத் துறைகளும் சிறந்த ஆய்வு மையங்களாக விளங்கி வருகின்றன. தன் மொழிசார்ந்த பின்புலத்தை ஒரு மனிதன் தெரிந்து கொள்வது, நிகழ்காலத்திற்கும் எதிர்காலச் சமூகத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. அவ்வடிப்படையில் உலக மக்களுக்கு வழிகாட்டியாகவும் காலந்தோறும் வளம் பெற்று வருகின்ற தன்மையும் கொண்ட மொழி தமிழ். இம்மொழிக்குக் கூடுதலாக வளம் சேர்ப்பது சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் தமிழர்களின் அகம், புறம் சார்ந்த திணைக்கோட்பாடுகளை மைய இழைகளாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு திணைக்கும் உரிய துறைப்பகுப்புகளைக் கொண்ட ஒரே பனுவல் சங்க இலக்கியமாகும். தமிழர்களின் வாய்மொழி இலக்கிய மரபு, அவர்தம் வீரச்சிறப்பு ஆகியவற்றை அறிந்து கொள்வது, அறிவார்ந்து சிந்திப்பது, இவற்றை ஆராய்ந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது, உலக மக்களுக்குச் சங்க இலக்கியத்தின் விழுமிய வாழ்க்கை முறையினை விரிவாக எடுத்துக்கூறுவது போன்றவை இன்றைய காலத்தின் தேவையாக அமைகின்றது.

தனக்குத் தோன்றும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்ற அறிவு மனிதனுக்குத் தோன்றியபோது, சைகைகள் மூலமாகத் தெரிந்துகொள்ளத் தொடங்கினான்.

காலப்போக்கில் அறிவு வளர வளர மொழியும் வளரத்தொடங்கியது. மொழியைக் கற்றுக் கொண்ட மனிதன் தன்னுடைய கருத்துகளைப் பிறரிடம் எடுத்துரைத்தான். அதனடிப்படையில் மொழிபெயர்க்க வேண்டிய சூழலும் உருவாகியது. மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள கருத்துகள், பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கை முறைகள், சடங்குகள், வழிபாடுகள் போன்றவற்றைப் பிற மொழிக்குக் கொண்டு செல்வதாகும். அதாவது மூலமொழியிலிருந்து இலக்குமொழிக்குப் பெயர்ப்பதாகும். செம்மொழி இலக்கியங்களைப் பிற மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, ஆங்கிலம், உருது, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் மொழிபெயர்த்திடும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்ச் செம்மொழியின் தனித்துவத்தையும் இரண்டு மொழிகளுக்கிடையே ஏற்படும் உறவினையும் மொழிக்கூறுகளையும் இன்றைய தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதையும் இதன் வழி உணரமுடிகிறது.

"தமிழ்ச் செம்மொழி இலக்கிய, இலக்கண நூல்களின் மொழிபெயர்ப்புகள்" எனும் தலைப்பிலான புத்தொளிப் பயிற்சியின் மூலம் பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள் செம்மொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் குறித்த பயிற்சிகள் மேற்கொண்டு அடுத்த தலைமுறை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பது இன்றியமையாததாகும். இதுவே இப்புத்தொளிப் பயிற்சிக்கு அடிப்படை நோக்கமாக அமைகின்றது.

இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பு 19.08.2024 முதல் 04.09.2024 ஆம் நாள் வரை நடைபெறவுள்ளது. புத்தொளிப் பயிற்சி வகுப்பின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாட்கள் 19.08.2024 - 04.09.2024 (14 நாட்கள்: ஞாயிறு, அரசு விடுமுறை நீங்கலாக)
2. புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நேரம் : 10.00 – 01.00 & 02.00 – 05.00
3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் புத்தொளிப் பயிற்சித் தொடக்க நாளில் பதிவு கட்டணம் ரூ.1000/ -ஐச் செலுத்த வேண்டும்.
4. பங்கேற்பாளர் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குத் தங்குவதற்குரிய கட்டணமும், பயணப்படியும் அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

7. புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து அதன் மென்படிவத்தை (Softcopy) hrdctamiluni@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். வகுப்பு பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக் கூடாது.
8. விண்ணப்பம் உரிய வழியாக வரப்பெற வேண்டும்.
9. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 10.08.2024. இதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
10. தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 16.08.2024 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டுமே அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். அமர்வுகளுக்குத் தாமதமாக வருவதைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் அல்லது இடைநிற்றல் இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.
12. பங்கேற்பாளர்கள் தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
13. அரசு, அரசு உதவிப் பெறும் கல்லூரி, சுயநிதிக் கல்லூரி போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
14. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் வன்படிவத்தைக் (Hardcopy) கீழே உள்ள முகவரிக்கு அனுப்பவும்.

முனைவர் ப. இராஜேஷ்
இயக்குநர்
மனிதவள மேம்பாட்டு மையம்,
ஒருங்கிணைப்பாளர், புத்தொளிப் பயிற்சி வகுப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613010
தொடர்புக்கு : 9788849914